111—

புதிய வழித்தடம்

***18329—திரு. தி. வேல் முருகன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கடலூர் மாவட்டம், திட்டக்குடியிலிருந்து திருப்பதி மற்றும் பெங்களூர் செல்ல, புதிய வழித்தடத்தை இயக்கிட, அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகத்தின்மூலம் திட்டக்குடியிலிருந்து திருப்பதி மற்றும் பெங்களூர் ஆகிய இடங்களுக்குப் பேருந்து இயக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், திட்டக்குடி அருகிலுள்ள விருத்தாசலத்திலிருந்து தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் கோட்டம் மூலமாக, திருப்பதி மற்றும் பெங்களூருக்குப் பேருந்து இயக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. பி.கே. சேகர்பாபு.

திரு. பி.கே. சேகர்பாபு: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி. சென்னை மாவட்டத்திற்கு 135 பேருந்துகளைப் புதியதாக வாங்கப்போவதாக மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் அறிவிப்பிலே தெரிவித்திருந்தார்கள். சென்னை மாநகரைப் பொறுத்த அளவிலே உட்புறச் சாலைகள் 2,475 கிலோ மீட்டரைக் கொண்டதாகவும், 14,567 தெருக்களைக் கொண்டதாகவும் உள்ளன. இந்த உட்புறச் சாலைகளுக்குப் பேருந்து செல்லத்தக்க அளவிலே, இருக்கிற வழித்தடங்களைத் தேர்வு செய்து புதிய பேருந்துகளை இயக்கிடவோ அல்லது மினி பேருந்துகளை இயக்கிடவோ மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2004 ஜூலை 31]

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சேகர்பாபு அவர்களுடைய கருத்து, இப்போது அரசினுடைய ஆய்வில் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆ.கு.சீ. அன்பழகன்.

திரு. ஆ.கு.சீ. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேருந்து வசதி என்பது, அடித்தட்டு மக்களின் பொருளாதார வளர்ச்சிக்கும், முக்கிய அடிப்படை வசதிக்கும் இயங்குகின்றன. இலாப நோக்கோடு பார்க்காமல், ஏற்கெனவே நிறுத்தப்பட்ட பேருந்துகளை இயக்க அரசு பரிந்துரை செய்யுமா என அறிய விரும்புகிறேன். மேலும், என்னுடைய தொகுதியில் கோட்டுப்பாக்கம் கிராமத்திற்குச் சென்று வந்த பேருந்துகள் நின்று போயின. அவற்றை மீண்டும் இயக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன். மேலும், வந்தவாசி வட்டம், போளூர் வட்டம், ஆரணி வட்டத்திலிருந்து பேருந்துகளை இயக்கி வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: கேள்வியை முடியுங்கள்.

திரு. ஆ.கு.சீ. அன்பழகன்: இடைப்பட்ட பெரணமல்லூர், சேத்துப்பட்டு, தேசூர் பொது மக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் நகரப் பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசு போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்த அளவிலே, இலாபத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு செயல்படுவதில்லை. இது commercially oriented service sector. இது ஒரு தொழில் நிறுவனம் போல செயல்பட்டாலும்கூட, மக்களுடைய வசதிகளுக்காக சில நேரங்களில் நஷ்டத்தை ஏற்றுக் கொண்டுகூட, நஷ்டம் வருகிற வழித்தடங்களில்கூட மக்களுடைய தேவைகளுக்காகப் பல இடங்களில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதோடு மட்டுமல்ல. அவருடைய தொகுதியிலே நிறுத்தப்பட்டுள்ள பேருந்துகளை இயக்குவதற்கு முன்வருவாரா என்று கேட்டிருக்கிறார்கள். அதை அவர் கோரிக்கையாக எழுதிக் கொடுத்தால், அதை அரசு பரிவுடன் கவனிக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

[2004 ஜூலை 31

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தொலைதூரப் பகுதிகளுக்குப் புதிய வழித்தடங்களில் பேருந்துகளை இயக்குகிறபோது, அவை இரவு நேர Express-களாக இருக்கிற அந்தப் பேருந்துகளில் இருக்கை வசதிகளுக்குப் பதிலாக, படுக்கை வசதிகளைக் கொண்ட பேருந்துகளை இயக்க அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படி இயக்குகிறபோது அதற்குப் பொது மக்கள் மத்தியிலே எந்த அளவிற்கு வரவேற்பு இருக்கும் என்று தெரியவில்லை. இதற்கு வரவேற்பு இருக்கிறதா என ஆய்வு செய்து, அப்படிப் பொது மக்கள் மத்தியிலே அதற்கு வரவேற்பு கிடைக்கும் என்று அரசு கருதுமானால், அதைப் பற்றியும் அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 112, திரு. எம்.எஸ். சந்திரசேகரன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

112—

பேருந்து இயக்குதல்

***41320—திரு. எம்.எஸ். சந்திரசேகரன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வேலூர் மாவட்டம், வள்ளிமலை அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் பௌர்ணமி கிரிவலத்திற்கு வரும் பக்தர்களின் வசதிக்காக சிறப்புப் பேருந்துகள் இயக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், வள்ளிமலை அருள்மிகு ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி திருக்கோயில் பௌர்ணமி கிரிவலத்திற்கு வரும் பக்தர்களின் வசதிக்காக அரசு போக்குவரத்துக் கழகம் மற்றும் தனியார் மூலம் போதிய அளவில் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.